# அன்னை பூமி

# அன்னை பூமி

## 1

மழை நிற்கவில்லை. ஆனால் ஆட்டம் முடிந்துவிட்டது. இத்தனை நேரமாகத் துளிகூட அசையாமல் ஆசனங்களில் உட்கார்ந்து கிடந்த ஜனங்கள் ஒரே கூட்டமாக எழுந்து நெருக்கித் தள்ளிக்கொண்டு கிளம்பினார்கள். தியேட்டரின் கதவுகளெல்லாம் திறந்துகொண்டன. மழைச்சாரல் 'சள்' ளென்று கதவுகளின் வழியாக எதிர்ப்பட்ட ஜனங்களின் மீது தெறித்தது. மேலேயிருந்து கூடல்வாய்களின் ஜலம் 'ஜோ'வென்று பேரிரைச்சலுடன் கொட்டியது. சுமார் மூன்று மணி காலமாகப் படத்தைப் பார்த்துக்கொண்டு பொறுமையுடன் அமர்ந்திருந்த ஜனங்களுக்கு இன்னும் சில நிமிஷ காலம் பொறுமையாக இருக்க முடியவில்லையே! மழையோ, சாரலோ, இடியோ, மின்னலோ எதுவாயிருந்தாலும் சரி, கொட்டகையை விட்டு அவர்கள் வெளியேறிக்கொண்டுதான் இருந்தனர்.

அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக நகர்ந்துகொண்டே தான் அவனும் கதவருகில் வந்தான். கதவருகில்தானே ஏதோ 'அளிந்து' போவிருப்போல ஜனங்கள் விழுந்தடித்துக்கொண்டு நெருக்குகிற வழக்கம்? கதவின் ஓரத்தில் அவனை அநேகமாக நசுக்கியே விட்டார்கள் ஜனங்கள். டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே போகும்போதுகூட எப்படியோ அவன் சட்டைக்கு அபாயம் ஏற்படவில்லை. ஆனால் இப்போது அது கிழிந்தே போய் வாலும் தோலுமாகத் தொங்கத் தொடங்கியது.

அவன் கொட்டகையைவிட்டு எப்படியோ நெருக்கித் தள்ளிக்கொண்டு ரோட்டுக்கு வந்துவிட்டான். ரோட்டில் ஒரே ஜலப்பிரளயம். குப்பையும் கூளமும் காகிதமும் கந்தலும்

ஞானோதய பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை-1